# சங்க இலக்கியங்களில் குற்றமும் தண்டனையும்

**சிவசோதி கேசவன்**

*மொழியியல் துறை, களனிப் பல்கலைக்கழகம்.*

*kesavan2508@gmail.com.*

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ்ச் சூழலில் கருக்கொண்ட இலக்கியங்களுள் காலத்தால் முந்திய இலக்கியப் படைப்புக்களாகச் சங்க இலக்கியங்களை அடையாளப்படுத்துவர். பொதுவாகச் சங்க காலத்தினை கி.பி. 1-3 வரையான நூற்றாண்டுகளென்பர்.எனினும், கி.மு 3 தொடக்கம் கி.பி 3வரையான நூற்றாண்டுகளே சங்க காலமென ஆய்வறிஞர் சுட்டுவர். சங்க காலம் குறித்து நோக்க முற்படுவோர் பெரும்பாலும் அக் கால இலக்கியப் பண்புகளாக காதல், போர் என்பவற்றை மாத்திரம் சுட்டிவிட்டு நழுவிக் கொள்வர். இருபதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியில், இவ் வழக்கத்தில் மாறுதல் ஏற்பட்டது. பல்வேறுபட்ட தத்துவக் கோட்பாடுகளின் வழிநின்று சங்க இலக்கியங்களை அணுகுகின்ற வழக்கம் இக் காலப்பகுதியில் தீவிரம் பெறத் தொடங்கிற்று. மரபிலக்கியங்கள் உணர்த்தும் கருத்தொவ்வொன்றையும் நுணுகி ஆராய்ந்து, அவற்றைத் தர்க்க ரீதியாக அணுகுகின்ற போக்கும் இக் காலகட்டத்தில் வளர்ச்சி கண்டது. அவ்வாறு மரபிலக்கியங்களை நவீன கோட்பாடுகளினூடாக மறுவாசிப்பிற்குட்படுத்தியவர்களுள் ஈழத்தவர்கள் முன்னிலை வகித்தனர் எனலாம். சங்க இலக்கியங்களினூடாகப் புலப்படும் சமுதாயம், மேலெழுந்தவாரியாகச் சுட்டப்படுவதைப் போன்றதொரு இயற்கை நெறியுடன் ஒன்றித்து வாழ்ந்த பொற்காலச் சமுதாயம் அல்ல. அதன்கண்ணும் பல்வேறுபட்ட வர்க்க வேறுபாடுகள், முரண்பாடுகள், அகநிலைச் சிக்கல்கள்,பாரபட்சங்கள் நிலவியதனைச் சங்க இலக்கியங்களே சுட்டி நிற்கின்றன. சங்க இலக்கியங்களில் பல்வேறுபட்ட உரிமை மீறல்களும், குற்றங்களும், அதற்கான தண்டனைகளும் வழங்கப்பட்டதனை அவதானிக்க முடிகிறது. அக் காலத்தில் குற்றமாகக் கருதப்பட்டவற்றை மக்கள் விரும்பாமையையும், அதனை இகழ்வதனையும் அவதானிக்க முடிவதுடன், தமக்கெதிராக அநீதி நடந்தேறியுள்ளதெனக் குரலெழுப்புவதனையும் அவதானிக்க முடிகிறது. இந் நிலையில், சங்க இலக்கியங்களில் குற்றங்களும், தண்டனைகளும் எவ்வாறு பதிவு செய்யப்பட்டிருக்கின்றதென்பதை ஆராயும் வகையில் இவ்வாய்வு அமைகிறது. விளக்க முறைத் திறனாய்வு மற்றும் விபரண அணுகுமுறை மூலம் இவ்வாய்வு தெளிவுபடுத்தப்படுகின்றது. இவ்வாய்வின் மூலம் சங்க இலக்கியங்களில் சுட்டப்பட்ட குற்றங்கள், தண்டனைகள் குறித்த தெளிவான விளக்கம் முன் வைக்கப்படுகின்றது.

**திறவுச் சொற்கள்:** வாழ்வியல்,குற்றம்,தண்டனை, அசமத்துவம்



ISBN 978-955-627-120-1

**காதல் துரோகமும் தண்டனையும்**

காதலிப்பதும் பின்பு ஏமாற்றுவதும் சம காலத்தில் ஆங்காங்கே இடம்பெறுவதைப் போன்று, சங்க காலத்திலும் இடம்பெற்றதனைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்வதனை அவதானிக்க முடிகிறது.

‘‘தொல்புகழ் நிறைந்த பல்பூங் கழனிக்

கரும்பமல் படப்பைப் பெரும்பெயர்க் கள்ளூர்த்

திருநுதற் குறுமக ளணிநலம் வவ்விய

அறனி லாளன் அறியே னென்ற

திறனில் வெஞ்சூ ளறிகரி கடாஅய்

முறியார் பெருங்கிளை செறியப் பற்றி

நீறுதலைப் பெய்த ஞான்றை

வீறுசா லவையத்து ஆர்ப்பினும் பெரிதே’’[1]

மேற் குறித்த பாடலில் காதல்த் துரோகம் பற்றிய வழக்கு விசாரணை இடம் பெற்றமையையும், சாட்சியங்கள் பெறப்பட்டமையையும், மக்கள் குற்றத்தினை இனங்கண்டு தண்டனை வழங்கியதனையும் அவதானிக்க முடிகிறது. அறநெறியில் ஒழுகாத ஒருவன், கள்ளூரில் இளம் பெண்ணொருத்தியைக் காதலித்து ஏமாற்றிவிடுகிறான். அவள் கள்ளூரின் ஊரவையிடம் இது குறித்து முறையிடுகிறாள். அவளது முறைப்பாட்டினை ஏற்றுக்கொண்ட ஊரவையானது அவ் வழக்கை விசாரிக்கிறது. அவ் ஆடவன், அப் பெண்ணைத் தனக்குத் தெரியாதென சபையில் கூறுகிறான். இவ்விருவரும் உறவாடியதையறிந்தவர்களிடம் இது குறித்து விசாரித்து அவர்களின் சாட்சியைப் பெற்றுக் கொண்ட ஊரவை, அவ் ஆடவன் பொய்யுரைத்தமையையும், அப் பெண் பாதிக்கப்பட்டமையையும் அறிந்து கொள்கிறது. அவ் ஆடவன் குற்றவாளி என்பதை சபை அறிவிக்கிறது. அவன் செய்த குற்றத்திற்காக, மூன்று பிரிவாகப் பிரிந்து செல்கின்ற மரக் கிளைகளின் நடுவில் அவனைப் பிணைத்து, அவனது தலையில் சாம்பலினைக் கொட்டி, அவனைத் தூற்றிப் பேசினர் என மேற்குறித்த பாடல் பதிவு செய்கிறது.

ஆண்களால் பெண்கள் காதலித்து ஏமாற்றப்படுவதனைப் போன்று பெண்கள் இடைநடுவே ஆண்களுடன் கொண்ட காதல்த் தொடர்பினை இடைநிறுத்தும் வழக்கம் அக்காலத்தில் இருந்ததனைச் சங்கப் பாடல்கள் சுட்டிநிற்கின்றன. அத்தகைய சந்தர்ப்பங்களிலும், பெண்கள் மீது கொண்ட பொருந்தாக் காதலினாலும், ஆடவர்கள் மடலேறும் வழக்கமிருந்ததனைச் சங்க இலக்கியங்கள் சுட்டி நிற்கின்றன.

‘‘பணைத்தோட் குறுமகள் பாவை தைஇயும்



ISBN 978-955-627-128-1

பஞ்சாய்ப் பள்ளஞ் சூழ்ந்து மற்றிவள்

உருத்தெழு வனமுலை யொளிபெற எழுதிய

தொய்யில் காப்போர் அறிதலும் அறியார்

முறையுடை யரசன் செங்கோ லவையத்

தியான்றற் கடவின் யாங்காவது கொல்

பெரிதும் பேதை மன்ற

அளிதோ தானேயிவ் வழுங்க லூரே''[2]

இக் குறுந்தொகைப் பாடலில், தான் மடலேறித் தான் தலைவி மீது கொண்டுள்ள காதலை, அறங்கூறும் அவையினர் முன்பு வெளிப்படுத்துவேன் எனக் கூறும் தலைவன், தான் தலைவிக்காகப் பாவை செய்தமையையும், மார்பில் தொய்யிலெழுதியதையும் குறிப்பிட்டுத் தலைவிமீது தான் கொண்ட அன்பை வெளிப்படுத்த முற்படுவதனை அவதானிக்க முடிகிறது. இப் பாடல் தோழிக்குத் தலைவன் கூறுவதாய் அமைகிறது. இவ்வாறு தலைவன் மடலேறி, அறங் கூறும் அவையினரிடம் முறையிட்டால், தலையிவினது வாழ்க்கை கேள்விக்குறியாகிவிடும் எனவுணர்ந்து, தலைவனை மணம் முடிக்கத் தோழி துணைபுரிவாள் என்ற உள்நோக்கம் தலைவனது கூற்றில் வெளிப்படுகிறது. எனவே, சபையினர் இத்தகைய வழக்குகளையும் கவனத்திற் கொண்டமை தெளிவாகிறது.

''சான்றவிர், வாழியோ! சான்றவிர்! என்றும்

பிறர் நோயும் தம் நோய் போல் போற்றி, அறன் அறிதல்

சான்றவர்க்கு எல்லாம் கடன் ஆனால், இவ் இருந்த

சான்றீர்! உமக்கு ஒன்று அறிவுறுப்பேன்''[3] எனத் தொடரும் கலித்தொகைச் செய்யுளில், மடலேறச் செல்கின்ற தலைவன், சான்றோரிடம் தான் தலைவி மீது கொண்ட அன்பினை விளக்கியுரைக்கத் தலைப்படுவதனை அவதானிக்க முடிகிறது.

ஆடவர் பரத்தை மேல் இச்சைகொண்டு அவரிடத்தே தங்கியிருந்தமை பற்றிய குறிப்புக்களைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்திருக்கின்றன. பரத்தையிடம் உறவாடிய பின்னர் வீடு திரும்பும் தலைவன் மீது, தலைவி கொண்டது, ''ஊடல்'' எனச் சுட்டப்படும் பொய்க் கோபமே ஆகும். இவ் ஊடலையே மருத நிலத்திற்குரிய ஒழுக்கமாகச் சுட்டினர். ஆண்கள் பல பெண்களுடன் தொடர்பு கொண்டமையை மருத நிலத்திற்குரிய ஒழுக்கம் என்ற போர்வையில் சமூகம் ஏற்றுக் கொண்டமையைப் பெரும்பாலும் அவதானிக்க முடிகிறது. இப் பொதுக் கருத்து நிலையைக் கட்டுடைத்துத் தனது கணவன் பரத்தையிடம் உறவு கொண்டிருப்பதற்கெதிராக நீதி வழங்கும் சபைகளில் தலைவி முறையிட்டமையையும் சங்க இலக்கியங்கள் பதிவு செய்திருப்பதனை அவதானிக்க முடிகிறது.



ISBN 978-955-627-120-1

“மடமதர் உண்கண் கயிறாக வைத்துத்

தடமென்றோள் தொட்டுத் தகைத்து மடவிரலால்

இட்டார்க் கியாழார்த்தும் பாணியில் எம்மிழையைத்

தொட்டார்த்தும் இன்பத் துறைப்பொதுவி கெட்டதைப்

பொய்தல் மகளிர்கண் காண இகுத்தந்திவ்

வையைத் தொழுவத்துத் தந்து வடித்திடித்து

மத்திகை மாலையா மோதி அவையத்துத்

தொடர்ந்தேம் எருது தொழில்செய்யா தோட

விடுங்கடன் வேளாளர்க் கின்று.”[4]

இப் பரிபாடல் செய்யுளில், தன் கணவன் பரத்தையின்மீது இச்சை கொண்டு வாழ்வதனைக் கண்டு பொறுக்க முடியாத தலைவி,அவனை ஊரவை முன் அழைத்துவர முயல்வதனையும், ஊரவையின் தண்டனைக்கஞ்சி, அவன் அவளிடமிருந்து தப்பிப்பதனையும் அவதானிக்க முடிகிறது. இதனைக்கொண்டு நோக்குகையில், மனைவியால் தன் கணவன் பரத்தைமீது கொண்ட இச்சையினால், தான் புறக்கணிக்கப்படுவதாக ஊரவையில் முறையிடப்படும் வேளையில், ஊரவை குற்றம் நிரூபிக்கப்படும்பட்சத்தில் தண்டனை வழங்கியமை தெளிவாகிறது.

**அநீதியான தண்டனை**

சங்க காலச் சமுதாயத்தில் அநீதியான முறையில் தண்டனைகள் வழங்கப்பட்டமையையும் சங்க இலக்கியங்கள் உணர்த்தி நிற்கின்றன.

“மண்ணிய சென்ற ஒண்ணுத லரிவை

புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்

கொன்பதிற் றொன்பது களிற்றொ டவணிறை

பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்

பெண்கொலை புரிந்த நன்னன் போல”[5]

இப் பாடலில், நன்னன் எனும் மன்னன் வழங்கிய மரணதண்டனை குறித்துப் பேசப்படுகிறது. அதாவது, நன்னனுடைய தோட்டத்திலுள்ள மாமரத்திலிருந்து ஒரு மாங்காய் அருகில் ஓடிக்கொண்டிருந்த ஆற்றில் விழுந்துவிட்டது. ஆற்றில் நீராடுவதற்காகச் சென்ற கோசர் குலத்தினைச் சார்ந்த பெண் மாங்காயை ஆற்றில் கண்டெடுத்து உண்டுவிடுகிறாள். அதனைக் குற்றமாகக் கருதிய நன்னன் அவளுக்கு மரதண்டனையை வழங்குமாறு கட்டளையிடுகிறான்.



ISBN 978-955-627-120-1

தனது மகள் செய்த குற்றத்திலிருந்து அவளை விடுவிப்பதற்காக, அவளது எடைக்குச் சமனான எடையில் பொன்னாலான பாவை செய்து கொடுப்பதற்கும், எண்பத்தொரு யானைகளை கொடுப்பதற்கும் அவளது தந்தை முன்வந்தபோதும், நன்னன் அதனை ஏற்காது மரண தண்டனையை நிறைவேற்றுகிறான்.

மேற்குறித்த அநீதியான தண்டனையைப் போன்றதொரு தண்டனையை வேறு சில பாடல்களிலும் அவதானிக்க முடிகிறது.

“முதைபடு பசுங்காட்டு அரில்பவர் மயக்கிப்

பகடுபல பூண்ட உழவுறு செஞ்செய்

இடுமுறை நிரம்பி ஆகுவினைக் கலித்துப்

பாசிலை அமன்ற பயறுஆ புக்கென

வாய்மொழித் தந்தையைக் கண்களைந் தருளாது

ஊர்முது கோசர் நவைத்த சிறுமையிற்

கலத்து முண்ணாள் வாலிது முடாஅள்

சினத்திற் கொண்ட படிவம் மாறாள்

மறங்கெழு தானைக் கொற்றக் குறும்பியன்

செருவியல் நன்மான் திதியற் குரைத்தவர்

இன்னுயிர் செகுப்பக் கண்டுசின மாறிய

அன்னி மிஞிலி”[6]

இப் பாடலில் அன்னி மிஞிலி எனும் பெண்ணின் தந்தைக்கு வழங்கப்பட்ட தண்டனை குறித்தும், தன் தந்தைக்குத் தண்டனை வழங்கியவர்களை அப் பெண் பழிவாங்கும் செய்தியும் இயம்பப்படுவதனைக் காணலாம். அதாவது, புன்செய் நிலத்தில் பயறு செழிப்பாக வளர்ந்திருக்கிறது. அன்னி மிஞிலியின் தந்தை மேய்த்துக் கொண்டிருந்த மாடானது பயறு பயிரிடப்பட்டிருந்த தோட்டத்தில் புகுந்து மேய்ந்துவிட்டது. நிலவுடைமையாளன் இது குறித்து ஊரவையிடம் முறையிடுகிறான். அவ் வழக்கினை விசாரித்த ஊரவையின் முன்னிலையில் தனது மாடு, விளை நிலத்தில் மேய்ந்ததனை அன்ன மிஞிலியின் தந்தை ஏற்றுக்கொண்டிருந்தபோதும், மாடு மேய்ந்ததனைக் கவனியாது இருந்தவை அவனது கண்களே எனவும், ஆகவே அவனது கண்களைப் பிடுங்கி அகற்ற வேண்டும் எனவும், ஊரவை தீர்ப்பளித்தது. தனது தந்தைக்கு அநீதியான முறையில் தீர்ப்பளிக்கப்பட்டதாகக் கருதிய அன்ன மிஞிலி, இக் கொடுமையைப் புரிந்த கோசகர் எனச் சுட்டப்பட்ட ஊரவையினரைப் பழிவாங்கும் முகமாக கலத்தில் உண்ணாது,தூய ஆடைகளை அணியாது இருந்தாள். இதனையறிந்த திதியன் என்பவன் அவளுக்கு உதவும்முகமாக கோசகரைக்



ISBN 978-955-627-120-1

கொலை செய்து அவள் கோபத்தைத் தணிக்கிறான். இங்கு மாடு பயிரை மேய்ந்தமைக்காக மாடு மேய்த்தவரின் கண்களைப் பிடுங்கித் தண்டனை வழங்கப்பட்டமையானது, அநீதியாகவே புலப்படுகிறது.

வேற்று அரசனது நலனின் பொருட்டு ஒற்றனாக வருவதும் சங்க காலத்தில் குற்றமாகக் கருதப்பட்டதனை அவதானிக்க முடிகிறது.

“வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி

நெடிய வென்னாது சுரம்பல கடந்து

வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்

பெற்றது மகிழ்ந்து சுற்ற மருத்தி

ஓம்பா துண்டு கூம்பாது வீசி

வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை

பிறர்க்குத் தீதறிந் தன்றோ வின்றே, திறப்பட

நண்ணார் நாண அண்ணாந் தேகி

ஆங்கினி தொழுகி னல்ல தோங்குபுகழ்

மண்ணாள் செல்வ மெய்திய

நும்மோ ரன்ன செம்மலு முடைத்தே”[7]

இப் பாடலில், உறையூரில் ஒற்றனாக வந்த, இளந்தத்தன் எனும் புலவனை எதிர்த்து, கோவூர்க்கிழார் பாடுவதனை அவதானிக்க முடிகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் அரசிற்கு எதிராக அமைந்தவைகள் யாவும் குற்றமாகக் கருதப்பட்டமை தெளிவாகிறது.

**பொய்ச் சாட்சி**

குற்றங்கள் இடம்பெற்றதாகக் கருதப்படும் சந்தர்ப்பங்களில், நீதி வழங்கும் சபைகளின் முன்னிலையில் சாட்சிகள் பெறப்பட்டதனை அவதானிக்க முடிகிறது. அவ்வாறு சாட்சியமளித்தோர் நீதிக்குமாறாகப் பொய்யுரைத்ததனைப் புலப்படுத்தும் வகையில் சங்கப் பாடல்கள் அமைவதனை அவதானிக்க முடிகிறது.

கலித்தொகையில் பொய்யுரைத்தவன் தரித்திருந்த மரம் செழுமையிழந்து பட்டுப் போனமை பற்றிய செய்தியினை அவதானிக்க முடிகிறது.

“கரிபொய்த்தான் கீழ் இருந்த மரம் போலக் கவின்வாடி



ISBN 978-955-627-120-1

எரிபொத்தி என் நெஞ்சம் சுடும் ஆயின் எவன் கொல்லோ”[8]

என்ற கலித்தொகை வரிகள், ‘‘உண்மையை மறைத்துப் பொய்ச் சாட்சி உரைத்தவன் தங்கியிருந்த மரம் வாடுவதனைப் போல எனது மனமும் வாடுகிறது’’ என்ற குறிப்பினைத் தருகின்றன.

சான்றோர்கள் பொய்யுரைக்க மாட்டார்கள் என்ற கருத்துநிலை நிலவியதனையும் அவதானிக்க முடிகிறது. இதனை, ‘‘அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க்கு இல்லை”[9] எனக் குறுந்தொகை பதிவு செய்கிறது.

பொய்ச்சாட்சி உரைத்தவர்களுக்கும், குற்றம் புரிந்தோருக்கு வழங்கும் தண்டனையைச் சங்க காலச் சமுதாயம் வழங்கியமையை அவதானிக்க முடிகிறது.

“தொல்புகழ் நிறைந்த பல்பூங் கழனிக்

கரும்பு அமல் படப்பைப் பெரும்பெயர்க் கள்ளூர்த்

திருநுதல் குறுமகள் அணிநலம் வவ்விய

அறனிலாளன் அறியேன் என்ற

திறன் இல் வெஞ்சூள் அறிகரி கடாஅய்

முறியார் பெருங்கிளை செறியப் பற்றி

நீறு தலைப்பெய்த ஞான்றை

வீறு சால் அவையத்து ஆர்ப்பினும் பெரிதே’’[10]

மேற்குறித்த பாடலில், ‘‘அழகிய பெண்ணொருத்தியை அவளது விருப்பமின்றி ஆடவனொருவன் கற்பழித்துவிடுகிறான். அவள் தனக்கு நிகழ்ந்த அநீதி குறித்து கள்ளூர் மக்கள் மன்றத்தில் முறையிடுகிறாள். ஊரவை முன்பு அவளைத் தனக்குத் தெரியாதெனக் கூறிய ஆடவன், பொய்ச் சத்தியமும் செய்தான். அவையினர் சுற்றத்தாரை விசாரித்தது. சிலர் அவன் குற்றவாளி எனவும் சிலர் அவன் தவறிழைக்கவில்லை எனவும் சாட்சியம் கூறினர். உண்மையை அறிந்துகொண்ட சபையானது, அவனையும், அவனுக்காகப் பொய்ச் சாட்சி கூறியவர்களையும் குற்றவாளிகள் எனத் தீர்ப்புக் கூறியதுடன், அவர்கள் தலைகளில் சுண்ணாம்புக் கற்களை வைத்து நீறாக்கித் தண்டனையை நிறைவேற்றியது’’ என்ற செய்தி பதிவு செய்யப்பட்டிருப்பதனை அவதானிக்க முடிகிறது.



ISBN 978-955-627-120-1

**முடிவுரை**

இவ்வாறு சுருக்கமாக நோக்குகையில் சங்க காலச் சமுதாயத்தில் குற்றமாகக் கருதப்பட்டனவற்றையும், வழக்கிலிருந்த தண்டனை முறைகளையும் ஓரளவிற்கு உணர்ந்து கொள்ள முடிகிறது. சங்க காலத்தில் நீதி வழங்கும் மன்றங்கள் வழக்கிலிருந்தமையும், அவை குற்றங்களை ஆராய்ந்து தீர்ப்பு வழங்கியமையும் புலனாகிறது. தமக்கெதிராக அநீதி இழைக்கப்பட்டுள்ளதெனக் கருதுகின்றபோது, மக்கள் நீதிவழங்கும் சபைகளில் வழக்குத் தொடர்ந்திருந்தமை தெளிவாகிறது. விவசாயம் பாதிப்புற்றபோதும், கற்பழிக்கப்பட்டபோதும், கணவன் பரத்தைமேற் கொண்ட மோகத்தால் மனைவியை மறந்தபோதும் வழக்குத் தொடரப்பட்டமையைச் சங்கப் பாடல்கள் தெளிவுபடுத்துவனவாய் அமைகின்றன. தலைவி மீது கொண்ட காதல் நிறைவேறாத வேளைகளிலும், தலைவன் சபையோரிடம் நீதி கேட்கும் பாணியிலமைந்த பாடல்களையும் அவதானிக்க முடிகிறது. ஆட்சியாளர்கள் தமது ஆட்சிக்கு எதிராகக் கருதிய யாவற்றையும் குற்றங்களாகக் கருதினர். இதனால் ஒற்றுவருதல் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்பட்டது எனலாம். அநீதியான முறையில் தீர்ப்பு வழங்கப்பட்டமையையும் சங்கப் பாடல்கள் உணர்தி நிற்கின்றன. இதற்கு மிஞிலியின் தந்தைக்கு வழங்கப்பட்ட தண்டனை, நன்னனது தோட்டத்து மாங்கனியை உண்ட பெண்ணிற்கு வழங்கப்பட்ட தண்டனை முதலானவை சான்று பகர்வதாய் அமைகின்றன. சாட்சிகளை அடிப்படையாகத் தண்டனைகள் வழங்கப்பட்டமையை அறிய முடிவதோடு, சான்றோர்கள் பொய்யுரைக்கமாட்டார்கள் என்ற கருத்து நிலையும் நிலவியதனை அவதானிக்க முடிகிறது. பொய்ச் சாட்சி கூறியவன் தங்கியிருந்த மரம் பட்டுப் போனதையும், பொய்ச் சாட்சியமளித்தவர்களைக் குற்றவாளிகளாகக் கருதித் தண்டனை வழங்கப்பட்டமையையும் அவதானிக்க முடிகிறது. சங்கப் பாடல்கள் காதலையும் போரையும் வெளிப்படையாக உணர்த்தி நின்றாலும், அக் காலத்திலும் குற்றங்கள் புரியப்பட்டமையையும், தண்டனைகள் வழங்கப்பட்டமையும் தெளிவாகிறது. அக் காலத்தில் குற்றங்களாகக் கருதப்பட்டவையும், வழங்கப்பட்ட தண்டனைகளும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் சமத்துவமாக அமையவில்லை எனலாம்.

---

**அடிக்குறிப்புக்கள்**

[1] அகம்-256:14-21

[2] குறுந்தொகை-276 : 1-8

[3] கலித்தொகை-139

[4] பரிபாடல் -20:55-63.

[5] குறுந்தொகை-292 :1-5.

[6] அகநானூறு-262:1-12

[7] புறநானூறு-47

[8] கலித்தொகை-34 :10-11

[9] குறுந்தொகை-184



ISBN 978-955-627-120-1

---

[10]அகநானூறு-256



ISBN 978-955-627-120-1